YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1147)
Level & Stream: Sec 3 HTL

| The Curriculum and Approaches to Learning | | Key Programmes / Competitions |
|---|---|---|
| தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படை மொழிதிறன்களைப் பெற தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்றுவளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்குதல். மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைத்து தமிழ்மொழி கற்றலை வழங்குதல். | | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா, வாசிப்புப் பயிற்சித்திட்டம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் மற்றும் கற்றல் பயணங்கள். |
| **Term** | **Learning Experiences (chapter, activity)** | **Learning Outcomes & Assessment** |
| 1 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 1,2</u>**<br><br>**<u>படித்தல்:</u>**<br><br>தமிழர் நாட்டுப்புறக் கலைகள், உறவுகளின் உன்னதம், பெண்களும் ஓவியங்களும், பற்றுக்கோடு ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>செயல்முறை கட்டுரை எழுதும் பயிற்சியில் ஈடுபடுவர். விவாத அடிப்படையில் அமைந்த கட்டுரை, வருணனை,விளக்கக் கட்டுரை எழுதுவர். சிற்றுரை, நெறியாளர் உரை எழுதுவர், உறவுமுறை மின்னஞ்சல் மற்றும் அலுவல் மின்னஞ்சலை எழுதுவர். | • புதிய சொற்களின் பொருளை அறிவர்; பனுவலின் கருத்தைப் புரிந்துகொள்வர்.<br>• சரியாகவும் தெளிவாகவும் பொருள் விளங்குமாறும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படிப்பர்.<br>• தலைப்புக்கேற்ற கருத்துகளைச் சரியான முறையில் தொகுத்து எழுதவும், உடன்பாட்டு எதிர்மறை அடிப்படையில் கருத்துகளை விளக்கி எழுதவும், மின்னஞ்சல் எழுதும் நோக்கத்திற்கு ஏற்ப கருத்துகளை நிரல்படுத்தி எழுதவும் அறிவர். |

| | | |
|---|---|---|
| | **இலக்கணம்:**<br>வேற்றுமைத் தொகை, வல்லின மெய் மிகும் இடங்கள், வல்லின மெய் மிகா இடங்கள், வினையாலணையும் பெயர், இணைப்புச் சொல், வினைமுற்றை வினையாலணையும் பெயராக்குதல், வினைமுற்றைத் தொழிற்பெயராக்குதல் ஆகிய இலக்கணக்கூறுகளைக் கற்றுக்கொள்வர்.<br><br>**இலக்கியம்:**<br>புதினம் அறிமுகம் செய்யப்படும். புதினம் என்றால் என்ன என்பதை அறிவர்.<br>6 மரபுத்தொடர்கள், 6 இணைமொழிகள், பழமொழி, திருக்குறள்<br><br>**கேட்டல் மற்றும் பேசுதல்:**<br>நிழலாட்டக் கலை, சிங்கப்பூர்க் குழந்தைகள் ஆகிய தலைப்புகளில் பனுவல்களை கேட்டும் ஒளிக்காட்சியைப் பார்த்தும் கருத்துகளை எழுத்துவழியாகவும் பேச்சுவழியாகவும் பரிமாறிக் கொள்வர். | • பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் பிழையான வடிவத்தைக் கண்டறிந்து திருத்துவர்.<br><br>• புதினம் குறித்த அறிமுகத்தைப் பெறுவர்.<br><br>• தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்கள் – பல்லூடகங்களைப் பயன்படுத்திக் கற்றல்.<br><br>**மதிப்பீடு:**<br><br>செயல்முறை கட்டுரை (Process-writing) |
| 2 | **பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 3,4,5**<br>**படித்தல்:**<br>மாணவரும் தலைமைத்துவப் பண்புகளும், இயற்கையைப் போற்றுவோம், கீழடி காட்டும் தமிழர் வாழ்வியல் ஆகிய தலைப்புகளில் அமைந்த படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br><br>**எழுதுதல்:**<br>மாணவர்கள் சம்பவக் கட்டுரை, கருத்துரைத்தல் கட்டுரை மற்றும் சிற்றுரை, உறவு, தொழிற்முறை மின்னஞ்சல்களை எழுதுவர். | • தலைமைத்துவப் பண்புகள், தமிழர் வாழ்வியல் நெறிமுறைகள் குறித்த கருத்துகளையும் தங்கள் சிந்தனைகளையும் தெளிவாக வெளிப்படுத்துவர். சிங்கப்பூரில் பசுமை நகரை உருவாக்குவோம் என்பது குறித்துக் கலந்துரையாடுவர்.<br><br>• முக்கியக் கருத்துகளை நிரல்படுத்தி இனியத்தொடர்களை |

| | | |
|---|---|---|
| | **<u>இலக்கணம்:</u>**<br>தன்வினை, பிறவினைத் தொடர்கள், மெய்யீற்றுப் புணர்ச்சி, உயிரீற்றுப் புணர்ச்சி ஆகிய இலக்கணக் கூறுகளை அறிவர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>சிறுகதையும் புதினமும், புதினத்தின் வகைகள் மற்றும் பிதன எழுத்தாளர்களுள் சிலரைப் பற்றி அறிவர்.<br>12 மரபுத்தொடர்கள், 5 இணைமொழிகள் பழமொழி, திருக்குறள் ஆகியவற்றைப் படிப்பர்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>வெளிப்புறக் கல்வியும் அனுபவமும், இயற்கைக்கு என் பங்களிப்பு மற்றும் வணிகத்தில் தடம் பதித்த பண்டைய தமிழர்கள் ஆகிய தலைப்புகளில் கேட்டல் பனுவல்களைக் கேட்டு வினாக்களுக்கு விடையளிப்பர். | இணைத்து எழுதும் திறன்களைப் பெறுவர்.<br><br>• பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் பிழையான வடிவத்தைக் கண்டறிந்து திருத்துவர்.<br><br>• சிறுகதை புதினத்திற்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்துகொள்வர். 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் – நுண்ணாய்வுச் சிந்தனையும் புத்தாக்கச் சிந்தனையும் பெறுவர்.<br>• ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• கருத்துப்பரிமாற்றத்தின்போது மற்றவர்களின் கருத்தைக் கேட்டுத் தங்கள் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பர்; தேவையேற்படின் தமது கருத்துகளில் தேவையான மாற்றத்தைச் செய்வர்; வகுப்பில் கலந்துரையாடுவர். தக்க சான்றுகளுடன் ஆமோதித்தோ மறுத்துரைத்தோ முடிவெடுப்பர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தாள் 2 – மொழிக்கூறுகள் ஆண்டிறுதிக்கான வாய்மொழித் தேர்வுகள் நடைபெறும் |
| 3 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 6,7</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>ஆறு மனமே ஆறு, அயலகத் தமிழறிஞர்களின் தமிழ்த்தொண்டு, ஆனவத்தை அடக்கும் அன்புமனம்,வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் | • சிற்றுரையைச் சரியாகவும் தெளிவாகவும் பொருள் விளங்குமாறும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படிப்பர். தலைப்பு, முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள் |

| | | |
|---|---|---|
| | அரும்படைப்பு ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>சிற்றுரை, நெறியாளர் உரை, கருத்துரைத்தல் கட்டுரை, விளக்கக் கட்டுரை, அலுவல் மற்றும் உறவு மின்னஞ்சல்களை எழுதுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br>இருதிணைப் பொதுப்பெயர், பிழை திருத்தம், வயிங்கோள் வினைமுற்று, ஓரெழுத்து ஒரு மொழி, சாரியை ஆகிய இலக்கணக்கூறுகளை அறிவர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>புதினத்தின் கூறுகளான கரு, களம், கதாபாத்திரம், கதைப்பின்னல், மொழிநடை ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வர்.<br>6 மரபுத்தொடர்கள், 5 இணைமொழிகள் பழமொழி, திருக்குறள் ஆகியவற்றையும் அறிந்துகொள்வர்.<br><br>**<u>கேட்டல்\நோக்கல் மற்றும் பேசுதல்:</u>**<br>சமூக வலைத்தளங்களும் இளைஞர் மனநலமும், நானும் தமிழாசிரியராக வேண்டும் ஆகிய தலைப்புகளில் கேட்டல் பனுவல்களைக் கேட்டு விடையளிப்பர். | முதலியவற்றைக் கொண்டு பனுவலின் சாரத்தைப் பெறுவர்.<br><br>• கொடுக்கப்பெற்றிருக்கும் தொடக்க வரிகளைக் கொண்டு சிறுகதை எழுதுவர். தலைப்புக்குப் பொருத்தமான மின்னஞ்சல்களை எழுதுவர்.<br><br>• பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் பிழையான வடிவத்தைக் கண்டறிந்து திருத்துவர்.<br><br>• பகுத்தாய்ந்து கருத்துரைக்கும் திறனையும் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் – கருத்துப்பரிமாற்றம், தகவல் திறன்களையும் பெறுவர்.<br><br>• ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br><br>• தங்கள் கருத்துகளையும் தங்கள் சிந்தனைகளையும் தெளிவாக வெளிப்படுத்துவர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தாள் 1 – தொழில்முறை மின்னஞ்சல் |
| 4 | **<u>பாடத்திருப்பம், மீள்ப்பார்வை</u>**<br>**<u>படித்தல்:</u>** | • மாணவர்கள் இதுவரைப் பெற்ற திறன்களை மறுபார்வையிடுவர். மீண்டும் பயிற்சி செய்வர். |

| | | |
|---|---|---|
| | கடந்த ஆண்டு தேர்வுத் தாள்கள், பிற பள்ளி தேர்வுத் தாள்கள் ஆகியவற்றிலுள்ள படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br>**எழுதுதல்:**<br>தேர்வுப் பயிற்சியாக சில எழுதுதல் பயிற்சியை மேற்கொள்வர்.<br><br>**இலக்கணம்:**<br>தேர்வுப் பயிற்சியாகப் பிழை திருத்தப் பயிற்சிகளைச் செய்வர்.<br><br>**இலக்கியம்:**<br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள் ஆகியவற்றுக்கான பயிற்சித்தாள்களைச் செய்வர்.<br><br>**கேட்டல் மற்றும் பேசுதல்:**<br><br>மாதிரி தேர்வு கேட்டல் கருத்தறிதலைச் செய்வர். | **மதிப்பீடு:**<br><br>தாள் 1 – மின்னஞ்சல், கட்டுரை<br><br>தாள் 2 – மொழிக்கூறுகள், கருத்தறிதல்<br><br>தாள் 3 – வாய்மொழித் தேர்வு<br><br>தாள் 4 – கேட்டல் கருத்தறிதல் |